சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

என்னிடம் காட்டப்படும் ஆவணம் 29.05.1991 தேதியில் என் பாட்டி மற்றும் அவருடைய வாரிசுகளுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் பதிவு நகல் தான். அது பிவாசாஆ.1. என்னிடம் காட்டப்படும் 12.06.1991 தேதிய கிரயப் பத்திரமானது என் தகப்பனார் மற்றும் அவருடைய சகோதரரும் கிரயம் வாங்கியதற்கான கிரயப் பத்திரத்தின் அசல் தான். அது பிவாசாஆ.2. என் தகப்பனார் மற்றும் அவருடைய சகோதரர் கிரசர் அமைப்பதற்காக இடத்தை கிரயம் வாங்கியதற்கான பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனாரும், அவருடைய சகோதரரும் 10.10.1996 தேதியில் ராஜா மெட்டல்ஸ் என்ற பெயரில் கிரசர் ஆரம்பிப்பதற்காக ஒரு கூட்டாண்மை பத்திரத்தை எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பத்திரம் பதிவாகாத பத்திரம். அதை ரத்து செய்ததற்கான ஆவணம் எதனையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அந்த கூட்டாண்மை பத்திரப்படி ஏற்பட்ட கூட்டாண்மை நிறுமம் கலைக்கப்பட்டதற்கான ஆவணம் எதுவும் இல்லை. கிரசர் அமைப்பதற்கான இடம் மற்றும் கூட்டாண்மை பத்திரம் ஆகியவற்றை வைத்து தான் வங்கியில் கடன் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த கூட்டாண்மை நிறுமம் இன்று வரை இயங்கி வருகிறது. **A**.**O**.சின்னராஜ் இறந்த பிறகு நானும், ரவிராஜும் அந்த கூட்டாண்மை நிறுமத்தை நடத்தினோம். ரவிராஜ் இறந்த பிறகு, நான் மட்டும் தனியாக நடத்திக் கொண்டிருக்கிறேன். அந்த நிறுமத்திற்கான விற்பனை வரியையும் செலுத்தியிருக்கிறோம். அந்த கூட்டாண்மை நிறுமத்திற்கான வரவு செலவு கணக்குகளையும் பராமரித்துக் கொண்டு தான் இருக்கிறோம். **A**.**O**.சின்னராஜ் இறந்த பிறகு, அவருடைய வாரிசுகளுக்கு நான் தொகை எதுவும் கொடுக்கவில்லை. கிரசர் சரியாக இயங்கவில்லை. கிரசர் நடந்து கொண்டிருந்த பூமியை என் தகப்பனாரும், அவருடைய சகோதரரும் உயிரோடு இருந்த போதும், அவர்கள் காலமான பிறகும் பாகப்பிரிவினை எதுவும் செய்து கொள்ளவில்லை. அந்த பூமியில் **A**.**O**.சின்னராஜுக்கு பாத்தியப்பட்ட பாதி பங்கை எனக்கும், ரவிராஜுக்கும் உயில் எழுதி கொடுத்துவிட்டார். **A**.**O**.சின்னராஜ் உயிரோடு இருந்த போதும், அவர் இறந்த பிறகும் தாசம்பாளையத்தில் உள்ள அவருடைய

**(S/d.)குணசேகரன்**

வீட்டிற்கு நான் அடிக்கடி சென்றதில்லை. ஏதாவது நல்லது, கெட்ட நிகழ்ச்சிகள் நடந்தால் செல்வோம். **A.O**.சின்னராஜ் காலமான பிறகு, தாசம்பாளையத்தில் உள்ள அவருடைய வாரிசுகள் வீட்டிற்கு நான் சென்றதில்லை. அவருடைய வாரிசுகளுடன் பேச்சுவார்த்தை உண்டா? என்றால் கிரசர் யூனிட்டை விற்பனை செய்து விடலாம் என்பதற்காக மட்டுமே பேசினேன். **A.O**.சின்னராஜுவின் வாரிசுகளிடம் வேறு விசயங்கள் எதனையும் பேசியதில்லை. என் சகோதரரும் அவர்களுடன் பேசியதில்லை. **A.O**.சின்னராஜ் இறந்து சுமார் 40 நாட்கள் கழித்து கிரசர் விற்பனை செய்வது சம்மந்தமாக கேப்டன்.துரை என்பவருடன் மட்டும் பலமுறை பேசினேன். அப்பொழுது அவருடைய வாரிசுகள் இல்லை. துரை, **A.O**.சின்னராஜுவின் வாரிசுகளிடம் பேசி விட்டு சொல்வதாக சொன்னார். **A.O**.சின்னராஜுவின் மகள்களுக்கு எப்பொழுது திருமணம் நடந்தது என்று தெரியாது. அவர்களுடைய திருமணத்திற்கு என்னுடைய பெற்றோர்கள் சென்றார்கள். நாங்கள் யாரும் செல்லவில்லை. **A.O**.சின்னராஜ், அவருடைய முதல் மகளுக்கு முன்னின்று திருமணம் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. **A.O**.சின்னராஜ், அவருடைய குடும்ப அட்டை தன் மனைவி குடியிருந்த தாசம்பாளையம் முகவரிக்கு மாற்றிக் கொள்ளவிருப்பதாக சொல்லியிருக்கிறார். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 1998 முதல் 2003-ம் ஆண்டிற்கு மேட்டுபாளையம் முகவரியில் **A.O**.சின்னராஜுக்கு இருந்த குடும்ப அட்டை தான். அது பிவாசாஆ.3 (மற்ற நபர்களின் ஆவணத்தை குறுக்கு விசாரணை மூலம் குறியீடு செய்ய முடியாது என்ற ஆட்சேபணைக்குட்பட்டு குறியிடப்படுகிறது). **A.O**.சின்னராஜுவிற்கு ஆலாம்பாளையம் முகவரியில் உள்ள குடும்ப அட்டையை என்னால் தாக்கல் செய்ய முடியும். அவர் மேட்டுபாளையத்தில் தன் மனைவி, மக்களுடன் நல்ல உறவுமுறையுடன் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் அவருடைய வீட்டிற்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் சென்று பார்த்திருக்கிறேன். அவர் கிரசரிலும் குடியிருந்து வந்தார். மேட்டுப்பாளையத்திற்கு அவரை நான் பார்க்க செல்லும் நாட்களுக்கு அடுத்த நாள் கிரசர் உள்ள இடத்திற்கும், எங்களுடைய வீட்டிற்கும் வந்து விடுவார். அவரை அவருடைய மனைவி, மக்கள் மதிக்காததால் சுமார் 10 வருடங்கள் தனியாக வசித்து வந்தார். சின்னராஜ் தான் தன் மனைவி, மக்கள் தன்னை மதிப்பதில்லை என்று சொல்லியிருக்கிறார். இந்த விபரங்களை என் பதிலுரையிலோ, சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை. நான் அந்த விபரங்களை வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**(S/d.)குணசேகரன்**

என்னிடம் காட்டப்படும் சிட்டா, 'அ' பதிவேடு மற்றும் 24.03.2016 தீர்வை ரசீதும் சின்னராஜுவின் சொத்திற்கான ஆவணங்கள் தான் என்றால், அதில் எங்களுடைய சொத்தும் கலந்து இருக்கிறது. அந்த ரசீது சின்னராஜுவின் மனைவி சரஸ்வதி பெயரில் உள்ளது. அது பிவாசாஆ.4. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது பட்டா எண்.8-ல் சின்னராஜுக்கு சம்மந்தப்பட்ட பூமிகளின் சிட்டாவின் கணினி நகல் தான். அது பிவாசாஆ.5. அந்த ஆவணத்தில் என் பெயரும் உள்ளது. சின்னராஜ் பெயர் நீக்கப்படாமல் உள்ளது. அதனால் பிவாசாஆ.5 ஆவணமானது கூட்டு பட்டாவாகதான் உள்ளது என்றால் சரியல்ல. சின்னராஜ், அவருடைய சொத்துக்களை பொறுத்து உயில் சாசனத்தை எங்களுக்கு எழுதிக் கொடுத்த விபரம் அதை எழுதிய முதல் நாளே எங்களுக்கு தெரியும், அவரவாகவே தான் வந்து எழுதிக் கொடுத்தார். நானும், என் சகோதரரும் சின்னராஜ் வரச் சொன்னதன் பேரில் பவானிசாகரில் காந்தி பிரஸ் என்ற இடத்திற்கு சென்றோம். அங்கு நானும், என் சகோதரரும், சின்னராஜும், காந்தி பிரஸ்ஸின் உரிமையாளரும், அவருடைய மகனும், புதுப்பாளையம் மற்றும் நல்லூரைச் சேர்ந்த இருவரும் அங்கு இருந்தோம். **A.O**.சின்னராஜ் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த முடியாததால் காந்தி பிரஸ் உரிமையாளர் எங்களுக்கு உரிமை ஆவணத்தை எழுதிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னதற்கிணங்க சின்னராஜ் அந்த கடனை திருப்பிச் செலுத்துவதற்காக உயில் சாசனத்தை சத்தியமங்கலம், பத்திர எழுத்தர் மனோகர் அலுவலகத்தில் வைத்து எழுதிக் கொடுத்தார். அதற்கு முன்பிருந்தே கிரசர் தொழிலுக்காக பெறப்பட்ட கடனை திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற நெருக்கடி இருந்து வந்தது. 20.06.2003 தேதியில் பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு சென்று உயில் சாசனம் எழுதப்பட்டது. நானும், என் சகோதரரும், சித்தப்பாவும், நடராஜ் மற்றும் ரகுபதிராஜ் ஆகியோர் தான் பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு சென்றோம். அப்பொழுது **A.O**.சின்னராஜ் என்னென்ன? ஆவணங்களை எடுத்து வந்தார் என்றால் தாவா பூமி சம்மந்தமான ஆவணங்களின் நகல்களையும், வங்கி கணக்கு வழக்குகள் சம்மந்தமான ஆவணங்களையும், ஜல்லி அனுப்பப்பட்டதற்கான ஆவணங்களையும் எடுத்து வந்தார். அந்த அனைத்து ஆவணங்களையும் பத்திர எழுத்தரிடம் சின்னராஜ் கொடுத்தாரா? என்றால் கொடுத்தார். என் சித்தப்பா தொழிலில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாகவும், அந்த தொழிலை முன்னின்று நடத்துவதற்காக எங்களையே விட்டுவிட இருப்பதாகவும், அதற்கு என்ன? செய்யலாம் என்று பத்திர எழுத்தரிடம் கேட்டதற்கு பத்திர எழுத்தர்

**(S/d.)குணசேகரன்**

உயில் சாசனத்தை எங்கள் பெயரில் எழுதி வைக்கலாம் என்று யோசனை சொன்னார். அதற்கு நாங்கள் மறுப்பு தெரிவித்து, எங்கள் சித்தப்பா உயிலை எழுதி வைத்தால் தான் தொழிலில் பிடிப்பு வரும் என்று சொன்னார். **A.O**.சின்னராஜுடன் பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு வந்த நடராஜ் மற்றும் ரகுபதிராஜ் ஆகியோரை யாரென்றே அந்த சமயத்தில் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை பத்திர பேப்பரில் தான் தயார் செய்தார்கள். அந்த தாள்களானது ரூ.20/- தாள்களாக இருக்கும் அல்லது ரூ.10/- தாள்களாக இருக்கும். 19.06.2003 தேதியில் தான் பவானிசாகரில் உள்ள காந்தி பிரஸ்ஸிற்கு சென்று விட்டு அதே தேதியில் சத்தியமங்கலத்தில் உள்ள பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு வந்த போது, அவர் இல்லாததால் திரும்பி சென்று விட்டோம். அந்த தேதியிலும் நடராஜனும், ரகுபதிராஜும் பவானிசாகருக்கு வந்து விட்டு, சத்தியமங்கலத்திற்கும் வந்தார்கள். **A.O**.சின்னராஜ் அந்த தேதியிலேயே பத்திரத்தில் சாட்சி போட வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் அழைத்து வந்தாரா? என்றால், ரகுபதிராஜ், காந்தி பிரஸ்ஸில் கம்பியூட்டர் ஆப்செட் பயிற்சிக்காக வந்திருந்தார். நடராஜுக்கு தொலைபேசி மூலம் என்னுடைய சித்தப்பா சொன்னதன் பேரில் வந்தார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுதலின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

(S/d.)குணசேகரன்
P.W.1

(S/d.)S.Chandrasekaran
District Munsif,
Sathyamangalam.